(முற்பகல் 10-10)

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : வெளியே எடுக்கப்படுவது எந்தமுறையில் என்பது பற்றி அரசு ஏதாவது கொள்கை வகுத்து உத்திரவிட்டிருக்கிறதா ? 11 ஆவது வகுப்பு அமுல் நடத்துவதன் விளைவாக பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் எந்த முறையிலே வெளியே எடுக்கப்படுவார்கள்? '

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அதுபற்றிய விவரமான மான அறிக்கையைத்தான் நான் இப்பொழுது வாசித்தேன்.

(இ) தஞ்சை மாவட்டம், மன்னார்குடி, ஜெயலட்சுமி விலாஸ் நடுத்தரப்பள்ளி நிர்வாகத்தினரின் போக்கு குறித்து.

திரு. மு. அம்பிகாபதி : பேரவைத் தலைவரவர்களே, மாண்பு மிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு,

'' தஞ்சை மாவட்டம், மன்னார்குடி நகரத்தில் உள்ள ஜெய லட்சுமி விலாஸ் நடுத்தரப் பள்ளி நிர்வாகம் விரைவில் பள்ளியை மூடவும், மாணவர்களையும், ஆசிரியர்களையும் நீக்கவும், அரசு அதிகாரிகள் உத்திரவை அமுல்படுத்த மறுப்பதும் குறித்த '' பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, தஞ்சை மாவட்டம் மன்னார்குடி நகரத்தில் உள்ள ஜெயலட்சுமி விலாஸ் நடுநிலைப்பள்ளி நிர்வாகி, அப்பள்ளியை 1977 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 1 ஆம் நாள் முதல் மூடிவிடுவதாக, அப்பள்ளியில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு 1977 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 29 ஆம் நாள் அன்று அறிவிப்பு ஒன்றினைக் கொடுத்துவிட்டு, கல்வி அலுவலரிடம் பள்ளியை 1977 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 1 ஆம் நாள் முதல் மூடிவிடுவதற்கு அனுமதி கேட்டிருந்தார்.

தமிழ் நாடு தனியார் பள்ளிகள் சட்டம் 1973 பிரிவு 29 விதி 20-ன் படி பள்ளி நிர்வாகி ஆறுமாதங்களுக்கு முன்னரே பள்ளியை மூடுதல் குறித்து அச்சட்டத்தில் குறிப்பிட்டுள்ள கல்வி அதிகாரிக்கு தெரிவித்தல் வேண்டும். மேலும் அந்த அறிவிப்பில் அப்பள்ளி மாணவர்கள் தொடர்ந்து படிப்பற்கு என்ன மாற்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்தல் வேண்டும்

மேலும், மேற்கூறிய சட்டத்தின்படி பள்ளியை மூடுவதாய் இருந்தால் பள்ளி ஆண்டு முடிந்த பின்னர்தான் மூடுதல் வேண்டும். மேற்சொன்ன பள்ளியை நிர்வாகி 1977 ஆம் ஆண்டு ஜூன்

திங்கள் 1 ஆம் நாள் முதல் பள்ளியை மூடுவதாயிருப்பின், அவர் 1976 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 1 ஆம் நாளிலேயே கல்வித் துறைக்கு தெரியப்படுத்தியிருத்தல் வேண்டும். ஆனால், பள்ளி நிர்வாகி பள்ளியை மூடுதல் குறித்து 1977ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 29 ஆம் தேதியன்று தெரிவித்துள்ளார்.

மேலும் இவர் கொடுத்த அறிவிப்பில் அப்பள்ளி மாணவர்கள் தொடர்ந்து படிப்பதற்கு என்ன மாற்று ஏற்பாடுகள் செய்துள்ளார் என்பதனையும் தெரியப்படுத்தவில்லை. எனவே, இவருக்கு, இப்பள்ளியை 1977 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 1 ஆம் நாள் முதல் மூடுவதற்கு அனுமதி மறுக்கப்பட்டது. இப்பள்ளி 1977 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 20 ஆம் தேதி அன்று திறக்கப்பட்டு தொடர்ந்து நடைபெற்று வருகிறது. ஆனால் இப்பள்ளியின் நிர்வாகி பள்ளியை 1978 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 1 ஆம் நாள் முதல் மூட இருப்பதாக 1977 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 1 ஆம் நாள் அன்றே மீண்டும் தஞ்சை மாவட்டம் முதன்மைக் கல்வி அலுவலருக்கு அறிவிப்பு கொடுத்துள்ளார். இப்பள்ளியில் படிக்கும் மாணவர்களை அண்மையில் உள்ள பள்ளிகளில் சேர்க்க தகுந்த நடவடிக்கைகள் எடுத்துள்ளதாகவும் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளார். இப்பள்ளியை 1978 ஆம் ஆண்டு ஜூன் திங்கள், 1 ஆம் நாள் முதல் மூடுவதற்கான நிர்வாகியின் அறிவிப்பு முதன்மைக் கல்வி அலுவலரின் பரிசீலனையில் இருக்கிறது. அப்பள்ளியில் பணியாற்றும் ஆசிரியர்களை நீக்க அப்பள்ளி நிர்வாகி அவர்களுக்கு தக்க முறையில் அறிவிப்பு கொடுக்க வேண்டும். அவ்வாறு அப்பள்ளியின் ஆசிரியர்களை நீக்குவதில் முறைகேடுகள் ஏதாவது இருப்பின் பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் முதன்மைக்கல்வி அலுவலரிடம் முறையீடு செய்யின் சட்ட ரீதியாக அவர் நடவடிக்கை எடுப்பார்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

திரு. மு. அம்பிகாபதி: பேரவைத் தலைவர் அவர்களே, மன்னார்குடி ஜெயலட்சுமி விலாஸ் நடுநிலைப் பள்ளியில் 148 மாணவர்களுக்கு டி.சி. கொடுக்கப்பட்டிருக்கிறது. மேலும் அந்த நிர்வாகத்தைப் பொறுத்த அளவில் ஆசிரியர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். 1977-ம் ஆண்டு ஜூன் மாதம் 16-ம் தேதி ஆர். வேலாயுதம், 1977-ம் ஆண்டு ஜூலை மாதம் 3-ம் தேதியில் பி. லலிதா, 1977-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 19-ம் தேதியில் சிவசுந்தரி, 1977-ம் ஆண்டு ஜூலை மாதம் 19-ம் தேதியில் சுகந்தி, ஜெபக்னி ஆகிய ஆசிரியர்கள் சட்ட விரோதமாக வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். இன்ஸ்பெக்டர் ஆப் ஸ்கூல்ஸ், நிர்வாகம் வேலை நீக்கம் செய்தது தவறு என்று சுட்டிக் காட்டியும் அவர்களுக்கு வேலை கொடுக்கவில்லை; மாவட்ட கல்வி அதிகாரி இதிலே தலையிடுவதிலே மெத்தனமாக இருப்பதாகச் சொல்லப்படுகிறது. இந்த வேலை நீக்கம் செய்யப்பட்டவர்களுக்கு உடனடியாக மீண்டும் வேலை கிடைக்கின்ற வகை

யில் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் துரிதமான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், இந்தப் பள்ளியை துரிதமாக அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

இப்படிப்பட்ட தனியார் பள்ளிகளில் சில ஆசிரியர்களிடம் 5 ஆயிரம், 2 ஆயிரம் என்று பணத்தை வாங்கிக் கொண்டு வேலைக்குச் சேர்க்கிறார்கள். பிறகு ஓராண்டு 10 மாதம் கழித்து நீக்கி விடுகிறார்கள். இந்த நிலை இருப்பதால் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்தப் பள்ளி பற்றி அரசு துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அரசை நான் வற்புறுத்துகிறேன்.

<u>மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்</u>: நீக்கப்பட்ட ஆசிரியர்கள் முறைப்படி முறையீடு செய்வார்களானால், சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன மற்ற யோசனைகள் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படும்.

6. ஒழுங்குப் பிரச்சினைகள்.

முதலமைச்சர்கள் மகாநாட்டின் முடிவுகளை முதல்வர் அவைக்கு அறிவிக்காததும், அவைக்கு வராததும் குறித்து.

<u>திரு. ஜே. ஜேம்ஸ்</u>: பாயிண்ட் ஆப் ஆர்டர். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், டெல்லியிலே முதலமைச்சர் மாநாட்டிற்கு சென்று வந்தார்கள். முதலமைச்சர் மாநாட்டில் என்னென்ன தீர்மானங்கள் விவாதிக்கப்பட்டன என்பதை இந்த அவைக்கு அவர்கள் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் சொல்வதும் இல்லை. அவர்கள் இந்த அவைக்கு வரவும் இல்லை. அதற்கு என்ன காரணம் என்பதை இந்த அவையிலே அறிவிப்பீர்களா ?

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u>: அவர்களுக்கு உடல் நலம் சரியில்லாத காரணத்தால், அவர்களுடைய அலுவல்களைக்கூட அவை முன்னவர் அவர்கள் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் நாளை வரும்போது, நீங்கள் கேட்ட தகவல் அவரிடம் இருக்குமானால் பதில் சொல்வார்கள்.

7. 1977-78 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தின் மீது பொது விவாதம்—தொடர்ச்சி

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u>: ஏறக்குறைய 26 பேர்கள் பேச வேண்டும். அதிலே குறிப்பாக எதிர்க்கட்சித் தலைவர்களிலே சில பேர்கள்—முக்கியமானவர்கள்—பேச வேண்டும்.